குரு நமச்சிவாயர் அருளிய

# அண்ணாமலை வெண்பா

ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை
2003

**Annamalai Venba** of Guru Namasivayar - **Tamil**. Published by V. S. Ramanan, President, Sri Ramanasramam, Tiruvannamalai - 606 603. Phone: 237292;237200
First Edition - 2003

முதல்
(கையடக்கப்) பதிப்பு : 2003

3000 பிரதிகள்

விலை. ரூபாய் **3**/-

**CC No: 2083**

*பதிப்பாளர்:*
வே.சு. ரமணன், தலைவர்,
ஸ்ரீ ரமணாச்ரமம்,
திருவண்ணாமலை — 606 603

*அச்சிட்டோர்:*
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர்—560 003; தொலைபேசி: 3346025

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணய

# பதிப்புரை

பகவானிடம் பக்தர்கள் அருணசலத்தின் மகத்வத்தைப் பற்றி வினவினுல் சில சமயங்களில் அசலமாக அமர்ந்திருப்பார். பகவானது மோனவிடை அருணசலத்தின் பெருமை மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாதது என்பதையும் அருணசலத்தைப் போன்ற அசல சித்தர்களே அதனை உணரக் கூடும் என்பதையும் உணர்த்துகிறது. எனினும் நம் போன்றவர்களுக்காக பகவான் பல சமயங்களில் அருணசலத்தின் பெருமையை தமது திருவாக்காலும் விரிவாக விளக்கியுள்ளார். ஒருமுறை அவர் "இந்த மலையின் பெருமையைப் பற்பல சமயத்தவர் பலவிதமாகக் கூறியுள்ளனர். புராணங்களில் இந்த அருணசலம் உள்ளே குகை வடிவமாக இருக்கிறது என்றும், இதில் அநேக சித்தர்களும் தவசிகளும் எப்பொழுதும் வாசம் செய்கிறுர்கள் என்றும்

கூறப்பட்டுள்ளன. இந்த மலையின் பெருமையை '**ஞானத் தபோதனரை வா என்று அழைக்கும் மலை அண்ணாமலை**' என்று **குரு நமச்சிவாயர்** பாடியிருக்கிறார் ........... மேலும் இந்த அருணாசலத்தின் பெருமையை யாரால் விளக்க முடியும்?" என்று கூறியிருக்கிறார். பகவான் குறிப்பிட்ட '**ஞானத் தபோதனரை வா என்று அழைக்கும் மலை அண்ணாமலை**' எனும் பலரும் அறிந்த இத்தொடர் **அண்ணாமலை வெண்பா** எனும் நூலில் முதல் பாடலில் இடம்பெற்றுள்ளது. இந்நூலை அருளியவர் அருளாளர் **குரு நமச்சிவாயர்**. இவர் அருளாளர் **குகை நமச்சிவாயர**து சீடர். அண்ணாமலை வெண்பாப் பாடல்கள், அனைவரும் எளிதில் பொருளறிந்துகொள்ளும்படி எளிய நடையில் அமைந்துள்ளன. இஃது இந்நூலின் தனிச் சிறப்பாகும். தமது குரு நாதரிடத்துத் தமக்குள்ள தீவிர பக்தியையும், குருநாதர் அண்ணாமலையார்பால் பேரன்பு பூண்டவர் என்பதையும், குரு நாதராக

வந்து அருள் புரிந்தது அண்ணாமலையாரே என்பதையும் இந்நூலில் 25 பாடல்களில் குரு நமச்சிவாயர் வெளியிட்டுள்ளார். சிவஞானம் அடைவதற்கு இன்றியமையாதவையும் வேறுவேறாகாதவையுமான அருணாசல பக்தி, குரு பக்தி ஆகிய இரண்டும் இந்நூலில் இரண்டறக் கலந்து மிளிர்கின்றன. அருணாசலத்தை வலம் வருங்கால் பாராயணம் செய்வதற்கு மிகவும் உகந்ததான இந்நூலினைக் கையடக்கப் பிரதியாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். அன்பர்கள் நாளும் அன்புடன் ஓதி அண்ணாமலை அண்ணல் அருள்பெற்று உய்வார்களாக.

பதிப்பாளர்

# அண்ணாமலை வெண்பா

## காப்பு

மன்னுதிரு அண்ணா மலைமாலை நாய்அடியேன்
பன்னுதமிழ் வெண்பாவில் பாடவே — துன்னுமலர்ப்
பாதனே மூடிகத்தின் பால்ஏறும் தேவகண
நாதனே நீமுன் நட.

## நூல்

1. ஆதிநடம் ஆடுமலை அன்றுஇருவர் தேடுமலை
சோதிமதி ஆடுஅரவம் சூடுமலை — நீதி
தழைக்குமலை ஞானத் தபோதனரை வாஎன்று
அழைக்குமலை அண்ணா மலை.

2. அன்பர் பிறப்பை அகற்றுமலை அன்பர்அல்லா
வன்பர் பிறப்பை வளர்க்குமலை – அன்பை
வடிக்குமலை சிங்கத்தை வந்துசிம்புள் ஆகி
அடிக்குமலை அண்ணு மலை.

3. கூற்றை உதைத்தமலை கோமாறன் கூடல்வைகை
ஆற்றை அடைத்தமலை ஆரூரன் – போற்றச்
சிறந்தமலை தீவினையேன் செய்தகுறை எல்லாம்
மறந்தமலை அண்ணு மலை.

4. ஏழைக்கு இரங்குமலை ஏதேது கேட்டாலும்
கோழைப் படாமல் கொடுக்குமலை – வேழம்
உரித்தமலை அம்மைக்கு ஒருபாகம் ஈந்த
மருத்துமலை அண்ணு மலை.

5. கண்டம் கரியமலே கண்மூன்று உடையமலே
அண்டர்எல்லாம் போற்றற்கு அரியமலே – தொண்டருக்குத்
தோற்றுமலே நாளும் தொழுவோர் எழுபிறப்பை
மாற்றுமலே அண்ணு மலே.

6. அன்னமுடன் சொன்னம் அளிக்குமலே ஆதரிப்போர்
உன்னுவரம் எல்லாம் உதவுமலே – துன்னுபுகழ்
கொண்டமலே அங்கிக் கொழுந்துஆகி அண்டம்உற
மண்டுமலே அண்ணு மலே.

7. மாமா தவநமச்சி வாயன் தினம்ஒருவெண்
பாமாலே சாத்திப் பணியுமலே – காமாதி
என்னும்அலே தான்கடந்தோர் இன்பத் திருஉளத்தே
மன்னுமலே அண்ணு மலே.

8. அஞ்சுஅக் கரமாய் அமர்ந்தமலை ஆதரிப்போர்
வஞ்சக் கருவினையை மாற்றுமலை – நெஞ்சைத்
திருத்துமலை மெய்ஞ்ஞான சித்திதரும் தெய்வ
மருத்துமலை அண்ணா மலை.

9. தொண்டர் வலம்ஆகச் சூழுமலை சூழும்அவர்
பண்டைவினை எல்லாம் பறிக்குமலை – அண்டம்
உருவுமலை எந்தைகுரு ஓம்நமச்சி வாயன்
மருவுமலை அண்ணா மலை.

10. கொம்புஅனைய பேதைக் குறமகளிர் வானில்உறும்
அம்புலியி னோடுவிளை யாடுமலை – செம்பவளம்
ஒத்தமலை சற்குருவாய் ஒண்கழல்என் சென்னியின்மேல்
வைத்தமலை அண்ணா மலை.

11. ஞானகுரு நாதன் நமச்சிவா யன்கருணை
ஆனபரன் ஆகிஎனை ஆண்டமலை – வானவர்கள்
போற்றுமலை தீவினையேன் புந்திக் கவலைஎல்லாம்
மாற்றுமலை அண்ணு மலை.

12. சரண கமலம் தனைப்புகழும் தொண்டர்
மரண பவத்துயரம் மாறக் – கருணை
பொழியுமலை தட்டுப் புழுகுபனி நீரே
வழியுமலை அண்ணு மலை.

13. அன்பர் கருத்தில் அனவரதம் மேவுமலை
துன்பம் அகலத் துரத்துமலை – இன்பம்
விளைக்குமலை செம்பொன்மக மேருவினை வில்லா
வளைக்குமலை அண்ணு மலை.

14. நண்பாக் குகையின் நமச்சிவா யன்கருத்தில்
வெண்பாப் பயிராய் விளையுமலை – திண்பார்
அளந்தமலை செஞ்சுடராய் அன்றுஇருவர் தேட
வளர்ந்தமலை அண்ணா மலை.

15. சீதமல ரோன்நெடுமால் தேடுமலை அன்பருக்குப்
பாதமலர் வீடாய்ப் பலிக்குமலை – மாதவர்கள்
மொய்த்தமலை உண்ணா முலைஉமையைப் பாகத்தில்
வைத்தமலை அண்ணா மலை.

16. வைத்தநிதி ஓம்நமச்சி வாயகுரு நாள்தோறும்
மெய்த்தமிழி னல்புகழ்ந்து மேவுமலை – எத்திசையும்
மின்னுமலை மாதுடனே வெள்ளிமலை வீடாக
மன்னுமலை அண்ணா மலை.

17. முக்கோணம் ஆக முளைத்தமலை முண்டகன்மால்
அக்கோடு நாகம் அணிந்தமலை – திக்கோடு
துன்னுமலை தன்னைத் துதிக்கும்அடி யார்உளத்தில்
மன்னுமலை அண்ணா மலை.

18. வண்தமிழா லேநமச்சி வாயகுரு ஏத்துமலை
கண்டுதொழு வார்க்குஇனிய காட்சிமலை – அண்டமுதல்
நீளுமலை போற்றி நினைக்கும்அடி யார்உளத்தே
வாழுமலை அண்ணா மலை.

19. அஞ்சுஎழுத்தாய் வேதமாய் ஆகமமாய் நின்றமலை
விஞ்சுஎழுத்தாய் ஒன்றாய் விளங்குமலை – நெஞ்சகத்தே
தைத்தமலை நாயேனைத் தன்அடியார் கூட்டத்தில்
வைத்தமலை அண்ணா மலை.

20. மன்ஆளும் ஓம்நமச்சி வாயகுரு செந்தமிழால்
பன்னுளும் ஏத்திப் பணியுமலே – எந்நாளும்
மெய்க்குமலே பொல்லா வினேயேனேத் தன்அடிக்கீழ்
வைக்குமலே அண்ணு மலே.

21. எந்தைகுரு நாதன் இருக்குமலே என்பாச
பந்தம்அற நோக்கிப் பரித்தமலே – சந்திரனேத்
தேய்த்தமலே நாயடியேன் சிந்திக்கும் சிந்தனேக்கே
வாய்த்தமலே அண்ணு மலே.

22. அஞ்ஞானக் கங்குல் அகற்றுமலே அன்பருக்கு
மெய்ஞ்ஞானச் சோதி விளக்குமலே – துஞ்ஞானச்
சந்தமலே நாயேற்குத் தந்தைதாய் சற்குருவாய்
வந்தமலே அண்ணு மலே.

23. நீற்றை அணிந்தமலை நீள்சுடராய் நின்றமலை
ஏற்றைப் பரியாக ஏறுமலை – கூற்றை
உதைத்தமலை அன்றுஅரியை ஓர்சிம்புள் ஆகி
வதைத்தமலை அண்ணா மலை.

24. ஓலம்இடும் தேவர்குழாம் உய்யத் திருமிடற்றில்
ஆலவிடம் தன்னை அடக்குமலை – நாலுமறை
அந்தமலை நாயேனை ஆளக் குருவாகி
வந்தமலை அண்ணா மலை.

25. ஆதி நெடுமால் அயன்காண அன்றுபரஞ்
சோதிச் செழும்சுடராய்த் தோன்றுமலை – வேதம்
முழங்குமலை சிந்திப்பார் முன்நின்று முத்தி
வழங்குமலை அண்ணா மலை.

26. வந்துஉலகில் ஓம்நமச்சி வாயகுரு வாய்அடியேன்
சிந்தைகுடி கொண்டிருக்கும் தெய்வமலை – முந்தைவினை
நீக்குமலை சொல்லரிய நீள்பிறவித் துன்பம்எல்லாம்
மாய்க்குமலை அண்ணா மலை.

27. சத்திக்கு ஒருபாகம் தான்கொடுத்து நின்றமலை
முத்திக்கு வித்தாய் முளைத்தமலை – எத்திசையும்
போற்றுமலை போற்றிப் புகழ்வார் எழுபிறப்பை
மாற்றுமலை அண்ணா மலை.

28. வால மதியை மவுலியின்மேல் வைத்தமலை
சீலமுனி வோர்கள் செறியுமலை – காலம்
கடந்தமலை சீறிவரும் காலனைக்கா லாலே
அடர்ந்தமலை அண்ணா மலை.

29. சிட்டர் இடரும் சிவநீதி இல்லாத
துட்டர் சுகமும் துடைக்குமலை – நட்டம்
பயிலுமலை எவ்வுலகும் பாழ்படும்என்று ஆலம்
அயிலுமலை அண்ணா மலை.

30. கண்டம் இருளக் கடுவிடத்தை வானவர்க்கா
உண்டுபிரான் ஆகி உதவுமலை – தொண்டர்
இணங்குமலை வானோரும் ஏனோரும் போற்றி
வணங்குமலை அண்ணா மலை.

31. துன்பப் பசிதீர்க்கும் சுத்த சிவஞான
இன்பப் பசும்தேன் இருக்குமலை – அன்பர்க்கு
இருளும்அலை வாராமல் எப்போதும் காட்சி
அருளுமலை அண்ணா மலை.

32. செகம்மருவும் ஐம்புலனில் சேராமல் ஞானச்
சுகம்மருவ மேன்மைபுனை தொண்டர் – அகம்மருவும்
தூயமலை வஞ்சகர்க்குத் தோன்றும லேஒளிக்கும்
மாயமலை அண்ணா மலை.

33. கரத்தில் இனிய கனபொருளைத் தந்தும்
சிரத்தில் அடிஇணையைச் சேர்த்தும் – பரத்தும்
இகத்தும்அலை வாராமல் என்குருவாய் ஆண்ட
மகத்துமலை அண்ணா மலை.

34. பற்றி இமையோர் பகைசெறுவான் வந்துஎதிர்த்த
வெற்றி மதராசன் வேகவே – உற்று
விழித்தமலை தக்கனார் வேள்விதனை முன்னாள்
அழித்தமலை அண்ணா மலை.

35. பாடல் தனைவிரும்பிப் பாவலர்க்கா கப்பரவை
வீடு தனக்குஇருகால் மேவியே — கூட
இணக்குமலை தன்புகழை எண்திசைகள் தோறும்
மணக்குமலை அண்ணு மலை.

36. கந்திக்கும் தேமாங் கனிபறித்துக் கார்க்கடுவன்
மந்திக்கு நல்கி மகிழுமலை — சிந்திக்கும்
எண்ணம்அலைவு அற்றோர்க்கு இனியமலை ஓர்அஞ்சு
வண்ணமலை அண்ணு மலை.

37. உன்னு தவம்புரியும் ஓம்நமச்சி வாயகுரு
மன்னும் கருணைமுகில் வாழுமலை — பென்னம்
பெரியமலை மாலும் பிரமனும் தேடற்கு
அரியமலை அண்ணு மலை.

38. வேண்டும் அயன்மால் விழிமனத்துக்கு எட்டாமல்
நீண்டு தழல்பிழம்பாய் நின்றமலை – ஆண்ட
கருணைமலை ஒப்புஉரைத்துக் காணஅரி தான
அருணமலை அண்ணா மலை.

39. வீடு முதலா விரும்பும் பொருள்அனைத்தும்
பாடும்அடி யார்க்குப் பலிக்குமலை – நீடுபுகழ்
பூண்டமலை சற்குருவாய்ப் பொல்லாச் சிறியேனை
ஆண்டமலை அண்ணா மலை.

40. அனைத்துஉலகும் போற்றுதிரு ஐந்தெழுத்தை ஓதித்
தனைத்தொழுது பேணும் தவத்தோர் – நினைத்தவரம்
நல்குமலை எந்நாளும் நல்லோரும் நன்னெறியும்
மல்குமலை அண்ணா மலை.

41. மான்அனைய கண்ணார் வசமாகி நாயடியேன்
ஊனவினைக் காட்டில் உழலாமல் – ஞானநெறி
காட்டுமலை தன்னைக் கருதும்அடி யார்இடரை
வாட்டுமலை அண்ணா மலை.

42. பிள்ளை அறுத்துஉதவும் பேரா ளனைஉவந்து
கொள்ள வயிரவமெய்க் கோலமாய் – மெள்ள
நடந்தமலை சிம்புளாய் நாரசிங்க ரூபை
அடர்ந்தமலை அண்ணா மலை.

43. உய்யவரம் தந்துஅருளும் ஓம்நமச்சி வாயகுரு
வையம்முழு தும்துதிக்க வாழுமலை – துய்யவரம்
தேக்குமலை நல்லோர் செறியுமலை பெண்ணைஆண்
ஆக்குமலை அண்ணா மலை.

44. உண்ணு முலையாள் ஒருபாகம் ஆனமலை
கண்ணார் அமுதாய காட்சிமலை — விண்ணோர்
துதிக்குமலை அன்பர் தொழுதுஏத்தி நாளும்
மதிக்குமலை அண்ணு மலை.

45. நாதன்அரு ளான நமச்சிவா யன்கனிவாய்
ஓதுதமிழ் மாலை உகந்தமலை — பாதிமதி
சூடுமலை பத்திசெயும் தொண்டருடன் கூடிவிளை
யாடுமலை அண்ணு மலை.

46. தேவரையும் தேவருக்குத் தேவராய்ச் செப்பும்ஒரு
மூவரையும் மண்ணோர் முனிவரையும் — யாவரையும்
பெற்றமலை தன்பெருமை பேசுங்கால் தாய்தந்தை
அற்றமலை அண்ணு மலை.

47. நேசிக்கும் அன்பர் நினைவுகொடு பாவித்துப்
பூசிக்கும் பூசை பொருந்துமலை – ஆசைக்குள்
வீழுமலை பற்றுஒழிந்த மெய்அடியார் நெஞ்சகத்தில்
வாழுமலை அண்ணா மலை.

48. நன்றிபுனை நண்பன் நமச்சிவா யன்தினமும்
துன்றுமலர் தூவித் துதிக்குமலை – அன்றுஇருவர்
தேடுமலை சந்ததமும் தில்லைச்சிற் றம்பலத்தே
ஆடுமலை அண்ணா மலை.

49. நெஞ்சகத்தில் ஒன்றி நினைப்பார்க்கு மால்அறியாக்
கஞ்சம்ஒத்த பொன்னடியைக் காட்டுமலை – அஞ்சுஎழுத்தின்
நாமமலை அம்பிகைஉண் ணாமுலைஅம் மைக்குஉகந்த
வாமமலை அண்ணா மலை.

50. புன்தலையின் மாயன் புவிஇடந்தும் காணரிய
நன்றிதரும் பொன்னடியை நாடியே – என்றும்ஒரு
நாளும்அலை வாராமல் நாயேனைச் சற்குருவாய்
ஆளுமலை அண்ணு மலை.

51. சண்ட விடத்தைச் சகம்இறந்து போகாமல்
கொண்ட திறம்பாடிக் கொண்டாடித் – தொண்டர்
பணியுமலை மெய்முழுதும் பால்வெள்ளை நீற்றை
அணியுமலை அண்ணு மலை.

52. தில்லைவனம் காசி திருவாரூர் தென்மதுரை
நெல்லையிலும் பேர்ஒளியாய் நின்றமலை – தொல்லைமறை
பாடுமலை சந்ததமும் பத்தர்அகம் மேவிநடம்
ஆடுமலை அண்ணு மலை.

53. மூலமுதல் உண்ணு முலைஎன்றும் அன்பருக்குச்
சாலவரம் ஈந்தருளும் தாய்என்று – நாலுமறை
பேசுமலைப் பாகம் பிரியாச் சிவஞான
வாசமலை அண்ணு மலை.

54. தொல்நாவல் சுந்தரற்காத் தூதுபோய் வந்தமலை
நன்மைதரத் தொண்டருக்கு நல்குமலை – மன்மதனைக்
காய்ந்தமலை கூடலில்சங் கத்தா ருடன்தமிழை
ஆய்ந்தமலை அண்ணு மலை.

55. புண்டரிகன் மால்தேடிப் பொன்முடியும் பொன்னடியும்
கண்டறிய ஒண்ணுத காட்சிமலை – தொண்டருடை
ஊனமலை பற்றறுக்க ஓம்நமச்சி வாயகுரு
ஆனமலை அண்ணு மலை.

56. துன்றுமலர்ச் சோலைதொறும் சூழுமலைச் சோனைஎன
மன்றல் கமழும் மதுமாரி – என்றும்
பொழியுமலை மாறுமல் பூஞ்சுனைநீர் பொங்கி
வழியுமலை அண்ணு மலை.

57. வேட்ட அடியார் விளக்கும் சிவஞான
நாட்டம் பொழிபேர்ஆ னந்தநீர் – ஆட்டக்
குளிக்குமலை நாளும் குறைவுஇலாச் செல்வம்
அளிக்குமலை அண்ணு மலை.

58. நீலமலை தேடரிதாய் நின்றமலை நின்றதழல்
கோலமலை குன்றம் குனிக்குமலை – மூலமலை
அந்தமலை சுந்தரற்கா அன்றுஇரவில் தூதுபோய்
வந்தமலை அண்ணு மலை.

59. தரைஎலாம் உய்யத் தனித்திருந்து செய்யும்
கரைஇலா மாதவத்தைக் கண்டு – விரவிஒரு
பாகம்மலே மாதுபெறப் பாலித்து நின்றுஅருளும்
மாகமலே அண்ணு மலே.

60. கள்ளப் புலவேடர் கைவசமா கக்கனிந்து
தெள்ளத் தெளிந்தோர் செறிவாக – விள்ளக்
கருத்துமலே யாதுஇருக்கக் காட்சிதரும் தெய்வ
மருத்துமலே அண்ணு மலே.

61. முக்குணமும் ஐம்புலனும் மூளா வகைஅடக்கி
ஒக்கும்உணர் வாஇருப்போர் உள்ளத்தே – புக்குஉலவும்
பாதமலே தாய்வயிற்றில் பார்மீதில் வந்துபிற
வாதமலே அண்ணு மலே.

62. பண்அடுத்த கூடல் பழம்பதியில் பிட்டமுதை
உண்ணடுத்து வைகை உடையாமல் – மண்எடுத்துப்
போடுமலை சந்ததமும் பொன்னம் பலத்தில்நடம்
ஆடுமலை அண்ணா மலை.

63. அண்டமுழு தும்பறந்தே அன்னஉரு வாய்த்தேடி
மண்டலம்எ லாம்கோல மாய்த்தேடிப் – புண்டரிகன்
சீர்க்கமலை கோன்அறியாத் தெய்வச் சிவஞான
மார்க்கமலை அண்ணா மலை.

64. கூனல் சிறுபிறையைக் கோள்அரவுக்கு அஞ்சாமல்
வான்அப்பு அணிசடைமேல் வைத்தமலை – ஞானச்
சரதமலை ஆனந்தத் தாண்டவத்துக்கு ஏற்ற
வரதமலை அண்ணா மலை.

65. பொருந்துதலைச் சங்கப் புலவர்தமைப் போலே
விரிந்தபுகழ்க் கூடலிலே மேவி – அரும்தமிழை
ஆய்ந்தமலை பார்மீதில் ஐந்துஎழுத்தன் ஆகிவந்து
வாய்ந்தமலை அண்ணா மலை.

66. ஆதிமலை ஆதி அநாதிமலை அம்மைஒரு
பாதிமலை ஓதிமறை பாடுமலை – நீதிமலை
தந்த்ரமலை யந்த்ரமலை சாற்றியபஞ் சாக்கரமாம்
மந்த்ரமலை அண்ணா மலை.

67. அஞ்சு புலனும் அடக்கி அறிவுடையோர்
வஞ்ச வினைப்பிறவி மாயவே – நெஞ்சில்
அழுத்துமலை அன்பர் அனவரதம் போற்றி
வழுத்துமலை அண்ணா மலை.

68. கதித்தமுனி பாலகன்மார்க் கண்டனையே சீறிப்
பதைத்துவரும் காலன் படவே – உதைத்தஒரு
வீரமலை சற்குருவாய் மேவிளனை ஆண்டபட்ச
வாரமலை அண்ணு மலை.

69. இமயவரும் பத்தரும்மா கேசுரரும் காணச்
சமயகுரு வாம்நந்தி தாங்க – உமைஒருபங்கு
ஆனமலை வாக்குமனம் காயம் தமக்குஅரிய
வானமலை அண்ணு மலை.

70. ஆத்தி கடுக்கைமுத லானமலர் ஐந்துஎழுத்தால்
சாத்தி அடியவரும் தக்கோரும் – ஏத்திப்
புகழுமலை ஆங்குஅவரைப் பொற்கொடியோடு எய்தி
மகிழுமலை அண்ணு மலை.

71. மால்ஊன்றிச் செய்யும் மணம்தகைந்து சுந்தரனைக்
காலூன்றி ஆளக் கருணையாய்க் – கோல்ஊன்றித்
தந்த விருத்த சதுர்வே தியன்ஆக
வந்தமலை அண்ணா மலை.

72. அறுகும் மதியும் அணிமுடிமேல் கூடல்
மறுகு தனில்அடியார் வாழ – விறகு
சுமந்தமலை போற்றிசெயும் தொண்டர்அகம் தோறும்
அமர்ந்தமலை அண்ணா மலை.

73. மட்டுஉலவு கஞ்ச மலரோனும் மாயோனும்
திட்டமுடன் தேடித் திகைத்தாலும் – எட்டரிய
ஞானமலை பார்மீது நால்உகத்தில் நாலுவடிவு
ஆனமலை அண்ணா மலை.

74. மறைவடிவாம் சோமாசி மாறன்மகம் தன்னில்
உறைவடிவாம் பங்கில்உமை யோடு – நிறைவடிவாய்ச்
சென்றமலை அந்தணர்சூழ் தெய்வக் கனகமணி
மன்றமலை அண்ணா மலை.

75. எப்பொருளும் ஆகி இருசுடர் பார்ஆக
மெய்ப்பொருளும் ஆகி விளங்குமலை – கைப்பொருளை
ஒத்தமலை என்தலைமேல் ஓம்நமச்சி வாயன்அடி
வைத்தமலை அண்ணா மலை.

76. பல்உயிரும் கேட்டுஅறியப் பார்த்தன்கை யால்அடித்த
வில்அடியும் புத்தன் மிகஎறிந்த – கல்எறியும்
பட்டமலை மன்மதனைப் பார்வையினால் வெந்துவிழ
அட்டமலை அண்ணா மலை.

77. வானை உருவ வளர்ந்தமலை வாம்பச்சைத்
தேனைஒரு பாகத்தில் சேர்த்தமலை – யானை
அணித்திரள்சேர் சாரல் அதில்வேய்கள் ஈன்ற
மணித்திரள்சேர் அண்ணா மலை.

78. அன்று கயிலை அரக்கன் எடுத்தஅப்போ
நின்றுஅவனைக் காலால் நெரித்தமலை – என்றும்
அருத்துமலை எவ்வுலகும் அன்பர்இடர் நோய்க்கு
மருத்துமலை அண்ணா மலை.

79. அன்றுபதி னறுவயது ஆனமார்க் கண்டர்தமக்கு
என்றும்ஈர் எண்வயதே என்றமலை – நின்று
சிறக்குமலை தன்அடியார் செய்தகுறை எல்லாம்
மறக்குமலை அண்ணா மலை.

80. அன்றுஇருவர் தேட அனல்வடிவாய் நின்றமலை
நின்றுஉருகும் தொண்டருக்கு நேயமலை – என்றும்
நடிக்குமலை வேள்வியிலே நாரணனை ஓட
அடிக்குமலை அண்ணா மலை.

81. நஞ்சுஅணியும் கண்டமலை நாளும் அடியவர்தம்
வஞ்சவினை தான்அறுக்க வந்தமலை – நெஞ்சை
இளக்குமலை அன்பர்க்கு இனியபேர் இன்பம்
வளர்க்குமலை அண்ணா மலை.

82. பைஅரவம் சூடுமலை பத்தர்பணிந்து ஏத்துமலை
கையில்மழு மான்தரித்த காட்சிமலை – துய்ய
நதிஅணியும் வேணியின்மேல் நாறுமலர்க் கொன்றை
மதிஅணியும் அண்ணா மலை.

83. மயில்அரவம் சேருமலை மான்புலிகள் கூடிப்
பயிலுமலை வானோர் பரவும் – கயிலை
பொருந்துமலை எந்நாளும் போற்றும்அன்பர் நாவால்
அருந்துமலை அண்ணா மலை.

84. உற்றுப் புரத்தில் ஒருமூவர் தம்மைவைத்துப்
பற்றி எரிந்துவிழப் பார்த்தமலை – நத்தியே
நாளும் தனைத்தேடி நம்பும்அடி யார்தமையே
ஆளுமலை அண்ணா மலை.

85. உள்ளும் புறமும் ஒருசெயலாம் அன்பர்உளம்
கொள்ளுமலை நாட்டம் குளிக்குமலை – துள்ளும்
எருத்தின்மேல் ஏறுமலை என்பிறவி நோய்க்கு
மருந்துமலை அண்ணா மலை.

86. துன்பம் அகற்றுமலை தொல்வினையை நீக்குமலை
அன்பர்தமை வாஎன்று அழைக்குமலை — தன்பதத்தைக்
காட்டுமலை தன்னைக் கருத்தில்உறும் அன்பர்இடர்
வாட்டுமலை அண்ணா மலை.

87. போதமுற்ற மெய்அடியார் புந்தியிலே வேர்ஓடிப்
பாதம்உச்சி மட்டாய்ப் படர்ந்தமலை — நாதம்
தழைக்குமலை அன்பர் தபோதனரை வாஎன்று
அழைக்குமலை அண்ணா மலை.

88. முப்போதும் பூசித்து மோகித்துப் போற்றும்அவர்க்கு
அப்போது முன்நின்று அருளுமலை — எப்போதும்
தாய்க்கும்இனி தானமலை சற்குருவாய் நாயேற்கு
வாய்க்குமலை அண்ணா மலை.

89. காலை உதைத்தமலை கையில்மான் சூலமலை
வேலை விடம்அருந்தும் வெற்றிமலை – மாலை
அணிசேரும் நீள்முடிமேல் அங்குஅரவம் ஈன்ற
மணிசேரும் அண்ணா மலை.

90. மாறுபட்ட தக்கன்உயிர் மாய்த்தமலை மால்அயற்கு
நீறுபட்ட செந்தழலாய் நின்றமலை – கூறுங்கால்
ஒப்பனைகள் இல்லாது உயர்ந்தமலை நீள்முடிமேல்
அப்புஅணியும் அண்ணா மலை.

91. பச்சைநிறம் தானாகிப் பாதிவடிவு ஆனமலை
கச்சைஎனக் கட்செவியைக் கட்டுமலை – நிச்சயமாய்
மாளும் அடியேனை மாளா வகைஅருளி
ஆளுமலை அண்ணா மலை.

92. மான்ஒருகை வெற்றி மழுஒருகை ஆனமலை
ஞானமுனி வோர்கள்நித்தம் நாடுமலை – யானை
உரித்தமலை அம்மை உமைபாலே யார்க்கும்
அருத்துமலை அண்ணு மலை.

93. முல்லைமலர் கொன்றை முடிமேல் அணிந்தமலை
எல்லைஇல்லா மாதவர்கள் ஏத்துமலை – தில்லையிலே
நட்டமலை முப்புரத்தை நாடும்அன்பர் மூவரைவிட்டு
அட்டமலை அண்ணு மலை.

94. எல்லாரும் காணற்கு இனியமலை என்னுடைய
பொல்லா வினைஅறுக்கப் போந்தமலை – சொல்ஆரும்
நல்லமலை பொல்லாரை நாசம்உறப் பார்க்கைக்கு
வல்லமலை அண்ணு மலை.

95. ஆழி நெடுமால் அயற்கும்அரி தானமலை
ஊழின்வினை அன்பர்க்கு ஒழிக்குமலை – ஆழியிலே
நஞ்சுஅழலைக் கண்டு நடுங்கினரைக் காக்குமலை
அஞ்சுமுகத்து அண்ணா மலை.

96. எத்திசையும் தோற்றுமலை ஏறுஉகந்து நின்றமலை
சித்திவரம் ஈந்துஅருளிச் செய்தமலை – முத்தர்மனம்
பூணுமலை அண்டர் புகழுமலை நீண்டதொரு
மாணுமலை அண்ணா மலை.

97. வண்மைக் குணத்தவரை மாதவரை வந்தடைந்தோர்
தம்மைத் தளராமல் தாங்குமலை – உண்மை
பொருந்துமலை விண்ணவர்கள் போகாமல் ஆலம்
அருந்துமலை அண்ணா மலை.

98. வானத்துப் பூந்தருவை வாங்கிக் களிறுபிடி
யானைக்கு நீட்டி அணையுமலை – ஞானத்தர்
உன்னுமலை எந்நாளும் ஓம்நமச்சி வாயகுரு
மன்னுமலை அண்ணா மலை.

99. அழியாத முத்தி அளிக்குமலை அன்பர்க்கு
ஒழியா வினையை ஒழித்துக் – கழியாத
ஏற்றுப் பிறப்பை இனிஅமையும் என்றுஅருளி
மாற்றுமலை அண்ணா மலை.

100. பெற்றம் தனில்தோன்றிப் பெய்வளையும் தானும்என்தன்
குற்றம் களைந்துஅருளிக் கொண்டமலை – நித்தம்
புதியமலை கங்கைஅணி பொற்சடைமேல் வைத்த
மதியமலை அண்ணா மலை.

## நூல் பயன்

101. அண்ணு மலைமாலை ஆனதமிழ் வெண்பாவால்
தண்ஆரும் ஐந்தெழுத்தைச் சாற்றியநூல் – பண்ணுகக்
கற்றவர்கள் கேட்டவர்கள் காசினியில் பேரின்பம்
உற்றுஉலகை ஆள்வார் உவந்து.

## நூல் பாடிய முறை

102. மன்னுதிரு அண்ணு மலையைவலம் ஆகவந்துஉன்
உன்னுதிரு ஐந்தெழுத்தை ஓதினேன் – தென்அருணை
நாயகத்தைக் கோவிலிலே நான்கண்டேன் பெற்றுஎடுத்த
தாயகத்தைக் கண்டவர்பொன் தாள்.

* * *

# பாட்டு முதற்குறிப்பு அகராதி

**எண் – பாட்டு எண்**


அஞ்சு அக் ........ 8
அஞ்சு எழுத் ........ 19
அஞ்சு புலனும் ........ 67
அஞ்ஞான ........ 22
அண்ட ........ 63
அண்ண ........ 101
அழியாத ........ 99
அறுகு ........ 72
அன்பர் கருத்தில் ........ 13
அன்பர் பிறப்பை ........ 2
அன்று இருவர் ........ 80
அன்று கயிலை ........ 78
அன்று பதினறு ........ 79
அன்னமுடன் ........ 6
அனைத்து ........ 40
ஆத்தி ........ 70
ஆதி நடம் ........ 1
ஆதி நெடு ........ 25
ஆதி மலை ........ 66
ஆழி ........ 95
இமயவரும் ........ 69
உண்ணமுலை ........ 44
உய்ய ........ 43
உள்ளும் ........ 85
உற்று ........ 84
உன்னு ........ 37

எத்திசையும் ........................................ 96
எந்தை ........................................ 21
எப்பொருளும் ........................................ 75
எல்லாரும் ........................................ 94
ஏழைக்கு ........................................ 4
ஓலம் ........................................ 24
கண்டம் இருள ........................................ 30
கண்டம் கரிய ........................................ 5
கதித்த ........................................ 68
கந்திக்கும் ........................................ 36
கரத்தில் ........................................ 33
கள்ளப் ........................................ 60
காலை ........................................ 89
கூற்றை ........................................ 3
கூனல் ........................................ 64
கொம்பு ........................................ 10
சண்ட ........................................ 51
சத்தி ........................................ 27
சரண ........................................ 12
சிட்டர் ........................................ 29
சீத ........................................ 15
செகம் ........................................ 32
ஞானகுரு ........................................ 11
தரை ........................................ 59
தில்லை ........................................ 52
துன்பப்பசி ........................................ 31
துன்பம் அகற்று ........................................ 86
துன்று மலர் ........................................ 56
தேவரையும் ........................................ 46
தொண்டர் ........................................ 9

தொல்நாவல் ........................................ 54
நஞ்சு .......................................................... 81
நண்பா ........................................................ 14
நன்றி புனை ............................................ 48
நாதன் ......................................................... 45
நீலமலை .................................................... 58
நீற்றை ....................................................... 23
நெஞ்சகத்தில் ........................................... 49
நேசிக்கும் ................................................. 47
பச்சை ......................................................... 91
பண் அடுத்த ............................................. 62
பல் உயிரும் ............................................ 76
பற்றி ........................................................... 34
பாடல்தனை ................................................ 35
பிள்ளை ...................................................... 42
புண்டரிகன் ............................................... 55
புன்தலையின் ............................................ 50
பெற்றம் ..................................................... 100
பை அரவம் ................................................ 82
பொருந்து ................................................... 65
போதமுற்ற ................................................ 87
மட்டு ............................................................ 73
மயில் ........................................................... 83
மறை ............................................................ 74
மன் ஆளும் ................................................ 20
மன்னு ... மலைமாலை ......................... காப்பு
மன்னு ... மலையை .................................. 102
மாமாதவ ..................................................... 7
மால் ஊன்றி ............................................... 71
மாறுபட்ட .................................................. 90

மான் அனைய ........ 41
மான் ஒருகை ........ 92
முக்குணமும் ........ 61
முக்கோணம் ........ 17
முப்போதும் ........ 88
முல்லைமலர் ........ 93
மூலமுதல் ........ 53
வண்தமிழாலே ........ 18
வண்மை ........ 97
வந்து ........ 26
வால மதியை ........ 28
வானத்து ........ 98
வானை உருவ ........ 77
வீடு முதலா ........ 39
வேட்ட அடியார் ........ 57
வேண்டும் ........ 38
வைத்த நிதி ........ 16

* * *